# நவீன அரசியல் சிந்தனையில் அரசியல் அபிவிருத்தி என்ற எண்ணக்கரு - ஒரு விமர்சன ஆய்வு

**தி.விக்னேஸ்வரன்**

**ஆய்வுச்சுருக்கம்**

*நவீன அரசியல் சிந்தனைகளில் அரசியல் அபிவிருத்தி என்கின்ற எண்ணக்கருவானது 1950களில் வளர்ச்சி அடைந்த போதும் இன்று அரசறிவியல் பாடப்பரப்பில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்கின்ற தளமாகவுள்ளது. இவ் எண்ணக்கரு தொடர்பான புரிதலானது வளர்ச்சி அடைந்த மேற்குலக நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்குமிடையில் வேறுபட்டதாகவுள்ளது. அதாவது அரசியல் அபிவிருத்தி என்பது மேற்குலக நாடுகள் தமது சிந்தனைகளினையும் அரசியல் நலன்களினையும் மூன்றாம் உலக நாடுகளுக்கு கடத்துகின்ற ஒரு எண்ணக்கரு என்கின்ற ஒரு நிலை உள்ளது. ஒரு நாட்டின் அரசியல் ஒழுங்கமைப்பு, பொருளாதாரக்கட்டமைப்பு மற்றும் சமூக முறைமைகளின் விருத்தியடைந்த நிலையினைப் பற்றிய ஆய்வாக அரசியல் அபிவிருத்தி இனங்காணப்படுகின்றது. இறைமையுள்ள ஒரு நாட்டின் எல்லைப்பரப்புக்குள் வாழ்கின்ற மக்களது அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியிலான வாழ்க்கைத்தரமானது உயர்ந்த தரத்தில் பேணப்பட வேண்டும் என்கின்ற நோக்கிலேயே அரசியல் அபிவிருத்தி என்கின்ற எண்ணக்கருவின் தோற்றம், வளர்ச்சி என்பன அடையாளப்படுத்தப்படுகின்றன. ஆனால் அரசியல் அபிவிருத்தி தொடர்பான நாடுகளுக்கிடையிலான மாறுபட்ட கருத்து நிலையே அரசியல் அபிவிருத்திக்கு எதிராக முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்களுக்கு பிரதான காரணமாக உள்ளது. அரசியல் அபிவிருத்தியிலுள்ள நேர்முறையான அம்சங்களினை தேசிய நலன்கள் மற்றும் பிராந்திய அரசியல் நலன்களுக்கு அப்பால் அனைத்து நாடுகளும் மக்களும் அனுபவிப்பதற்கான அரசியல் புறச்சூழ்நிலையானது தோற்றுவிக்கப்பட வேண்டும். இப் பின்னணியில் அரசியல் அபிவிருத்தி என்கின்ற எண்ணக்கருவானது இங்கு ஆராயப்படுகின்றது.*

**திறவுச் சொற்கள் :** அரசியல் அபிவிருத்தி, மேற்குலக நாடுகள், வளர்முக நாடுகள், அரசியல் நலன்கள்

அரசியல் அபிவிருத்தி என்பது பொருளாதார ரீதியான அபிவிருத்தியில் இருந்து வேறுபட்ட ஒன்றாகவும் பொருளாதார அபிவிருத்தியின் சில விடயங்களினையும் சமூகம் சார் விடயங்களையும் உள்ளடக்கிய நிச்சயமற்ற பரந்துபட்ட பகுதிகளினை உள்ளடக்கிய செயற்பாடாகவும் அரசியல் அபிவிருத்தி அமைகின்றது. லூசியன் W.பை (Lucian W.Pye 1965) என்கின்ற அறிஞர் அரசியல் அபிவிருத்தி தொடர்பாக குறிப்பிடுகின்ற பொழுது "பொருளாதார முறைமை, சமூகக் கட்டமைப்பு மற்றும் அரசியல் கட்டமைப்பு என்பவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு முறைகளும் ஒரு வளர்ச்சி நிலையும் அரசியல் அபிவிருத்தி" எனக் கூறுகின்றார். (புஸ்பராஜ் 2011:152) சாமுவேல் P.கன்டிங்டன் (Samuel.P Huntingtion) அரசியல் அபிவிருத்தி தொடர்பாக குறிப்பிடுகின்ற பொழுது அரசியல் அபிவிருத்தியானது தனிமனிதனின் சிந்தனையுடன் இணைந்தது என்கின்றார். (Das & Choudhury 1997:117) ஸ்டெய்ன் (Stein, 1982) அரசியல் அபிவிருத்தி பற்றிய ஆய்வுகளில் அரசியல் அபிவிருத்தியானது வளர்ச்சி அடைகின்ற ஜனநாயகவாதம்,

ஒழுங்கமைப்பினைக் கொண்ட அரசியல், வேகமாக வளர்ச்சி அடைகின்ற பணியக அமைப்பு, அரசியல் தொழில்மயமாக்கல், அரசியல் ஈடுபாடுகளினால் ஏற்படுகின்ற அபிலாஷைகள், அரசியல் மயமாக்கல் செயற்பாடுகள் மேம்பாடடைந்த அடைவுகள் போன்ற அரசியல் நியாயதிக்கத்தினை உள்ளடக்கியதாகவும் ஊக்குவிப்பதாகவும் காணப்படுகின்றது என்கின்றார். (புஸ்பராஜ் 2011:154)

அரசியல் அபிவிருத்தி தொடர்பாக அறிஞர்கள் மத்தியில் ஒருமித்த கருத்து நிலைப்பாடு காணப்படாமையினாலும் அரசியல் அபிவிருத்தியானது பரந்தளவிலான விடயங்களினை உள்ளடக்கியுள்ளமையும் அரசியல் அபிவிருத்தியினை அளவிடுவது கடினமான ஒன்றாக உள்ளமையினாலும் அரசியல் அபிவிருத்தி என்றால் என்ன என்பதனை வரையறுப்பதில் பிரச்சினை காணப்படுகின்றது. (Manivasagar 1998:46) அரசியல் அபிவிருத்தியானது மனிதனது அரசியல் நடத்தைக் கோலங்களினை ஆய்வுக்குட்படுத்துகின்றமையினாலும், மனிதனது சமூக அடுக்கமைவுகள், பொருளாதார பின்புலங்களும் அரசியல் அபிவிருத்தியில் நேரடியாகவும் மறைமுகமாகவும் செல்வாக்குச் செலுத்தி வருவதனாலும் அரசியல் அபிவிருத்தி என்கின்ற கோட்பாட்டினை இன்று சமூகவியலாளர்களும் பொருளியலாளர்களும் கொள்கை உருவாக்க செயற்பாடுகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்கின்றார்கள். அரசியல் விஞ்ஞான ஆய்விலும் இன்று அரசியல் அபிவிருத்தியானது முதன்மையான பங்கினைக் கொண்டுள்ளது. இதற்கு உதாரணமாக அரசறிவியல் கற்கைநெறியில் ஒரு பிரதான பரிமாணமாக அரசியல் அபிவிருத்தி பல்கலைக்கழகங்களில் போதிக்கப்பட்டு வருவதனைக் கூறலாம். இவ் ஆய்வானது இரண்டாம் நிலைத் தரவுகளினை மையப்படுத்திய விமர்சன ஆய்வாகவுள்ளதுடன் நாடுகள் அரசியல் அபிவிருத்தியினை புரிந்து கொண்டுள்ள தன்மையின் அடிப்படையில் கருதுகோள் பரிசீலிக்கப்பட்டு ஆராயப்படுகின்றது.

இரண்டாம் உலகமகா யுத்தத்தினைத் தொடர்ந்து பல ஆசிய, ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகள் காலணித்துவத்தின் பிடியில் இருந்து விடுதலை பெற்று புதிதாக சுதந்திர அரசுகளாகத் தோற்றம் பெற்றமையும் சுதந்திரம் பெற்ற நாடுகள் தமது அரசியல், சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்புக்களில் பல்வேறு மாற்றங்களினை உள்வாங்கியமையும் ஐக்கிய நாடுகள் சபையினது தோற்றத்துடன் மனித உரிமைகள் சட்டம், ஜனநாயக விஸ்தரிப்பு போன்றன சர்வதேச ரீதியாகவும் பிராந்திய ரீதியாகவும் செல்வாக்குப் பெற்றமையும் தேசிய அரசுகளின் அரசியலிலும் சமூகத்திலும் பல்வேறு மாற்றங்களினை எற்படுத்தியதுடன் சர்வதேச ரீதியான உலக ஒழுங்கிலும் மாற்றம் ஏற்பட்டது. இவ்வாறான மாற்றங்கள் பல தொடர்ச்சியாக இடம்பெற ஆரம்பித்தன. குறிப்பாக பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் சமூகக்கட்டமைப்புக்களிலும் சமூகக்கட்டமைப்புக்களில் ஏற்படுகின்ற மாற்றங்கள் அரசியலிலும் தாக்கங்களினை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான மாற்றங்கள் தோற்றம் பெறுகின்ற சூழ்நிலையில் அரசியல் அபிவிருத்திக் கோட்பாடு தொடர்பாக தெளிவான பொருத்தமான எளிமையான வரையறைகளினை முன்வைப்பது கடினமானதாக உள்ளது.

லூாசியன்.W.பை (Lucian.W.Pye) என்கின்ற அரசியல் சிந்தனையாளர் அரசியல் அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகளினை மேற்கொண்டு அரசியல் அபிவிருத்தியில் பின்வரும் மூன்று பண்புகளினை இனங்காண்கின்றார். (Das & Choudhury 1997:106)

- சாதாரண [illegible] மக்கள் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் பால் வேறுபாடுகளுக்கு அப்பால் அரசியலில் பங்கெடுக்க வேண்டும்.

- அரசியல் செயற்பாடுகளது உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகள் சமூக மாற்றங்களினையும் பொருளாதாரத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கங்களினை ஏற்படுத்துகின்றன. இவற்றில் இருந்து அரசியல் செயற்பாடுகளினை வேறுபடுத்த முடியாது.

- அரசியல் முறைமையில் காணப்படுகின்ற வேறுபாடுகளும் அரசியல் அபிவிருத்தி செயற்பாட்டில் செல்வாக்கு செலுத்துகின்றது.

அரசியல் அபிவிருத்தி தொடர்பாக A.டெனிரன் (A.Deniran, 1975) குறிப்பிடுகின்ற போது அரசியல் அபிவிருத்தியானது அரசியல், சமூக மற்றும் பொருளாதாரம் சம்பந்தமான நாளாந்த விடயங்களுடன் தொடர்புபட்டுள்ளதனைப் போன்று சமூகப் புரட்சிகளும் அரசியல் அபிவிருத்தியுடன் நெருக்கமான தொடர்புகளினைக் கொண்டுள்ளன என்கின்றார். ஏனெனில் சமூகப் புரட்சிகளினால் ஏற்படுகின்ற விளைவுகளான புதிய சமூகக் கட்டமைப்புக்களும் வேறுபட்ட சமூகங்களும் அரசியல் அபிவிருத்தியினைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கின்றன என்கின்றார். (புஸ்பராஜ் 2011:155-156)

அரசியல் அபிவிருத்தியினை முதலாளித்துவ பொருளாதார முறைமையினை பின்பற்றுகின்ற அமெரிக்க தலைமையிலான மேற்குலக நாடுகளது மாதிரி, மார்க்சிச வாதிகளது மாதிரி என இரண்டாக வகைப்படுத்த முடியும். அமெரிக்க தலைமையிலான மேற்குலக நாடுகளது மாதிரி என்பது மேற்கத்தேய ஜனநாயக அம்சங்களினையும் மேற்கத்தேயத்துக்கு சார்பான சர்வதேச அரசியலின் வியாபகத்தினையும் கொண்டது. மார்க்சிச வகையிலான அரசியல் அபிவிருத்தி என்பது வகுப்பு வேறுபாடுகளும் பொருளாதார பாரபட்சமும் அற்ற சமூகத்தைக் காண விரும்புகின்றது. உற்பத்தி சாதனங்கள், சொத்துகள், அரசுடமையாக்கல் போன்ற விடயங்களினை உள்ளடக்கிய சமத்துவமான சமூகத்தினை உருவாக்குவதே அரசியல் அபிவிருத்தியின் பிரதான நோக்கம் என்கின்றது. மார்க்சிய அரசியல் அபிவிருத்தியானது சோசலிச அம்சங்களினை உள்ளடக்கிய சோசலிச சமூகத்தினை உருவாக்குகின்ற நோக்கிலானது.

அரசறிவியல் ஆய்வு செய்கின்ற விடயங்களில் சமகாலத்தில் அரசியல் அபிவிருத்தி என்கின்ற எண்ணக்கருவானது பிரதானமான ஒன்றாகவுள்ளது. அரசியல் அபிவிருத்தி என்கின்ற கோட்பாடும் சொல்லாடலும் இரண்டாம் உலக மகாயுத்தத்துடன் ஆரம்பமாகி இன்று எழுபது வருடங்களுக்கு மேலாக அரசியல் அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன் அரசியல் அபிவிருத்தி கோட்பாடு பிரபல்யம் அடையவும் வழிகோலியது எனலாம். சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தினது ஒப்பீட்டு விஞ்ஞான ஆய்வுக்குழு அரசியல் அபிவிருத்தியானது 1955ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே கோட்பாட்டு ரீதியிலான வளர்ச்சி நிலையினை அடைந்துவிட்டது என்கின்றது. இதனைத் தொடர்ந்து 1966 ஆம் ஆண்டு வருடாந்த அரசறிவியல் மாநாட்டில் அரசியல் அபிவிருத்திக்கான கோட்பாட்டில் நகரமயமாக்கம், சமூக ஒன்றுகூடல் மற்றும் அபிவிருத்தி என்பன சேர்க்கப்பட்டதனைத் தொடர்ந்து அரசியல் அபிவிருத்திக்கான ஆய்வுப்பரப்பானது விரிவுபடுத்தப்பட்டது எனலாம்.

அரசியல் அபிவிருத்தி கோட்பாட்டின் வளர்ச்சிப் பாதையில் வெவ்வேறு அறிஞர்களும் பங்காற்றியுள்ள போதும் அரசியல் அபிவிருத்திக்கான கேப்ரியல் A. ஆல்மண்ட் (Gabriel A. Almond) வழங்கிய பங்களிப்பானது அதிகமானது என அளவிடப்படுகின்றது. குறிப்பாக சமூகவிஞ்ஞான ஆய்வு மையத்தினது புதிய தலைவராக கேப்ரியல் A. ஆல்மண்ட் தெரிவு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து அரசியல் அபிவிருத்தி தொடர்பான கோட்பாட்டினை

உருவாக்குவதில் முனைப்புடன் செயற்பட்டார். இவர் அரசியல் கலாசாரம், அரசியல் முறை என்பவற்றுடன் அரசியல் அபிவிருத்திக்கும் முக்கியத்துவம் கொடுத்திருந்தார். (புஸ்பராஜ் 2011:156) இவரினைத் தொடர்ந்து அரசியல் அபிவிருத்திக்கு பங்காற்றியவர்களில் முதன்மையானவர்களாக லூாசியன். W.பை, (Lucion W.Pye), டேவிட் ஈஸ்டன் (David Estan), லேனார்ட் - பைண்டர் (Leonard Binder) ஆகியவர்களது பங்களிப்புக்கள் மிக முக்கியமானதாக உள்ளது.

லேனார்ட் பைண்டர் (Leonard Binder)ன் கருத்தின்பிரகாரம் அரசியல் அபிவிருத்தியானது பின்வரும் விடயங்களினை உள்ளடக்கியுள்ளது என்கின்றார். (புஸ்பராஜ் 2011:159)

- அடையாள மாற்றம் - அதாவது சமயங்களி லிருந்து இனத்துவத்திற்கும் குறுகிய நிலையில் இருந்து சமூகம் சார்ந்த நிலைக்கும் மாற்றமடைவதனை குறிக்கின்றது.
- அரசியல் பங்குபற்றுதலில் மாற்றம் - அதாவது உயர் குழாமிலிருந்து சாதாரண மக்கள் குடும்பத்திலிருந்து குழுக்கள் வரையிலான மாற்றம்.
- பங்கீட்டு மாற்றம் - அந்தஸ்து மற்றும் சிறப்புரிமையில் இருந்து விடுபடாது காணப்படும்.
- நாட்டின் நிர்வாகம் மற்றும் சட்ட மாற்றம் - சமூக கட்டமைப்பு மற்றும் பின்தங்கிய சமயங்களினைக் கொண்டு காணப்படும்.

அரசியல் அபிவிருத்தியினது பரிணாம வளர்ச்சியில் அது அரசியல், சமூக மற்றும் பொருளாதாரம் சார் பல்வேறு விடயங்களினை உள்வாங்கி வந்துள்ளது. அந்த வகையில் அரசியல் அபிவிருத்தி ஆய்வு செய்கின்ற பரந்த விடயங்களில் பின்வரும் விடயங்கள் முதன்மையானவைாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன:-

- அனைத்துப் பிரஜைகளும் நிறம், மதம், இனம், மொழி போன்ற வேறுபாடுகளுக்கு அப்பால் சமமாக கணிக்கப்படுதல்
- சட்டங்கள் மக்களினால் தார்மீக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவற்றின் முழுமையான அமுலாக்கல் தன்மை காணப்படல்
- தேசிய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளூ ராட்சி அரசாங்கத்துக்கு கொடுக்கப்படும் மதிப்பானது உயர்வானதாகக் காணப் படல்
- மக்களது அரசியல் பங்குபற்றுதலானது உயர்ந்த அளவில் தொடர்ச்சியாகக் காணப்படுதல்
- கட்டுப்பாடு அற்ற வாதப்பிரதி வாதங்களும் விமர்சனங்களும் காணப்படல்
- பொது விவகாரங்களினை கையாள்வதில் அரசியல் முறைமையானது சிறப்பான தாக திகழ்தல்
- மக்களது கோரிக்கைகளும் அவற்றுக்கான பதிலீடுகளும் விரைவானதாகவும் மக்களினைத் திருப்திப்படுத்தக் கூடியதாகவும் காணப்படுதல்
- அமைப்புக்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையில் நிலவுகின்ற ஒருங்கிணைந்த செயற்பாடுகள்
- அரச செயற்பாடுகள் உயர்வாகவும் தனித்துவமானதாகவும் காணப்படல், பணியக அமைப்பு மற்றும் நீதித்துறை யினது உயரிய தன்மை

- சமூக பொருளாதார அபிவிருத்தியின் சிறப்பான நிலை

மேற்குறிப்பிட்ட விடயங்களினை அரசியல் அபிவிருத்தி உள்ளடக்கியுள்ள போதும் அரசியல் அபிவிருத்தி தொடர்பாக ஆய்வுகளினை மேற்கொண்ட அறிஞர்களது கருத்துக்கள், வரைவிலக்கணங்கள் அரசியல் அபிவிருத்தி தொடர்பாக பின்வரும் சில விடயங்களினையே வலியுறுத்துகின்றன. அந்த வகையில் ஜனநாயகம் தொடர்பான மரபு ரீதியிலான கருத்துக்கள், அரசியல் ஜனநாயக கருத்துக்கள், அரசினைக் கட்டியெழுப்புதல், தேசியவாதம் தொடர்பான கருத்துக்கள், தேசியவாதமும் சமூகத்தொடர்பாடலும், பேரரசுகளில்இருந்து தேசியவாதம்வரையிலான நிலைமைகள், நவீனத்துவமும் அரசியல் அபிவிருத்தி கற்கையும், நவீனத்துவமும் சமூகங்களின் கட்டமைப்புக்களும், அரசியலில் நவீனமயமாக்கல் செயற்பாடு, சமூக மாற்றம் தொடர்பான கற்கையாக மாற்றங்களும் சமூகங்களின் அரசியல் ஒழுங்கும், இனத்துவம் அற்ற அபிவிருத்தி கோட்பாடு (புஸ்பராஜ் 2011:172) போன்ற விடயங்களினை அரசியல் அபிவிருத்தி தொடர்பாக ஆய்வுகளினை மேற்கொண்ட அறிஞர்களது கருத்துக்களில் காணப்படுகின்ற பொதுமைப்பாடான விடயங்களாக உள்ளன. ஆனாலும் மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு அப்பாலும் அரசியல், சமூக மற்றும் பொருளாதார ரீதியிலான விடயங்களினை அரசியல் செயற்பாடுகளுடன் இணைந்து ஆய்வு செய்கின்ற ஒரு கோட்பாடாக அரசியல் அபிவிருத்திக் கோட்பாடு பரிணமித்து வருவதனை சமகாலத்தில் காணலாம்.

அரசியல் அபிவிருத்தி என்கின்ற கோட்பாடானது வேகமாக வளர்ச்சி அடைந்து வருகின்றதுடன் வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ந்து வருகின்ற நாடுகளில் அரசியல் அபிவிருத்தியானது பல நேர்க்கணிய விளைவு களினையும், எதிர்க்கணிய விளைவு களினையும் தோற்றுவித்துள்ளமை உண்மையே. ஆனாலும் அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகள் பின்வரும் ஐந்து வகையான அணுகுமுறைகளினை அடிப்படையாகக் கொண்டே அரசியல் அபிவிருத்தியினை பார்க்கின்ற ஒரு பொதுமைப்பாடான நிலை உண்டு. (புஸ்பராஜ் 2011:176)

- சட்டபூர்வமான அணுகுமுறை
- நிர்வாக அணுகுமுறை
- அரசியல் கலாசார அணுகுமுறை
- பொருளாதார அணுகுமுறை
- சமூக முறைமை அணுகுமுறை

**சட்டபூர்வமான அணுகுமுறை :-** ஒவ்வொரு நாடும் தமது மக்களுக்கு பாரபட்சங்களினைக் கடந்து சுதந்திரம், உரிமை, சமத்துவத்தினை அரசியல் யாப்பு ரீதியாக வழங்கி நிற்பதனையே அரசியல் அபிவிருத்தி ஆரம்ப நிலையில் வலியுறுத்துகின்றது. இங்கு சட்டத்தின் முன்பு யாவரும் சமம், சட்டத்தின் ஆட்சி, சட்ட ரீதியிலான அதிகாரப்பகிர்வு, எழுத்துருவிலான அரசியல் யாப்பு போன்ற விடயங்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றன. (குணரத்தினம் 2009:09) பொருத்தமான சட்டங்களினை சட்டத்துறை உருவாக்குகின்ற வேளை அவற்றினை நேர்த்தியாகவும் முழுமையாகவும் அமுல்படுத்துவதற்கு நிர்வாகத்துறையினர் முற்படுகின்ற போது ஏற்படுகின்ற சட்டப்பிரச்சினைகளினை நீதித்துறையானது வலுவேறாக்கத்தத்துவத்தினை அடிப் படையாகக் கொண்டு நீதிபரிபாலனம் செய்ய முற்பட்டால் அது இயல்பாகவே அரசியல் அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும் எனப்படுகின்றது.

பல்லின சமூகத்தினைக் கொண்டுள்ள ஒரு நாட்டில் அரசாங்க இயந்திரம் சட்டத்துக்கு புறம்பாக பாரபட்சமாக செயற்படுமாயின் அங்கு அரசியல் அபிவிருத்தியாது நெருக்கடிக்குள்ளாகும். ஏனெனில் அரசியல் அபிவிருத்தியின் முன்நிபந்தனைகளாக சட்ட ரீதியிலான புறச்சூழ்நிலை காணப்படல், மற்றும்

சமத்துவமாக மக்கள் நடாத்தப்படுதல் என்கின்ற ஏற்பாடுகள் காணப்படுகின்றன. அரசியல் அபிவிருத்தியானது தேசிய அதிகாரத்துடன் நேரடியாகத் தொடர்புபட்டது. இத் தேசிய அதிகாரமானது வளப்பங்கீடுகள் தொடர்பாகவும் அதிக கரிசனையுடன் செயற்பட வேண்டியுள்ளது.

**நிர்வாக அணுகுமுறை :-** ஓர் அரசாங்கம் உருவாக்குகின்ற கொள்கைகள், திட்டங்கள் மற்றும் சட்டங்களினை உரிய வகையில் அமுல்படுத்தி அவற்றினை வெற்றியடையச் செய்கின்றவர்கள் நிர்வாகத்துறையினர் என்கின்ற வகையிலும் உண்மையான ஜனநாயக விழுமியங்களது நிலைபேற்றுக்கும் நிர்வாகத்துறையினரது பங்களிப்புக்கள் உயர்வானதாக உள்ளது. எனவே அரசியல் அபிவிருத்தி செயற்பாடுகளினை நிர்வாகத் துறையினது பங்களிப்புக்கள் இன்றி வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாது. நிர்வாகத் துறையின் மையமாக திகழ்கின்ற பணியக அமைப்பானது அரசியல் கட்டமைப்புக்களிலும் செல்வாக்கினை செலுத்தவல்லது என்பதுடன் அரசியல் அபிவிருத்திக்கும் பணியக அமைப்பானது அடிப்படையானதாக உள்ளது. அரசியல் ரீதியிலான கொள்கைகள், தீர்மானங்களினையும் அமுல்படுத்துகின்றவர்கள் பணியக அமைப்பினராக உள்ளமையினால் இப்பணியக அமைப்பினர் பகுத்தறிவின் அடிப்படையில் நடுநிலையாக செயற்படாது அரசியல் கட்சிகள் மற்றும் அமுக்கக் குழுக்களது செல்வாக்குக்கு உட்பட்டு லஞ்சம், ஊழல், அதிகார துஷ்பிரயோக செயற்பாடுகளில் ஈடுபடுமாயின் அது அரசியல் அபிவிருத்தி செயற்பாடுகளினை நேரடியாக பாதிக்கின்ற ஒன்றாகவே அமையும்.

அரசியல் அபிவிருத்தியினை தோற்றுவிப்பதற்கு அறிவுபூர்வமான பணியக அமைப்பினரின் வினைத்திறன் வாய்ந்த செயற்பாடு அவசியமானதாக உள்ளது. ஏனெனில் அரசியல் அபிவிருத்தியினை உருவாக்குகின்ற செயற்திட்டங்கள் மற்றும் பொறிமுறைகள் என்பன பகுத்தறிவுடன் தொடர்புபட்டுள்ளமையினாலும் பணியக அமைப்பாளர்களது பகுத்தறிவினை பயன்படுத்தியே வளர்ச்சி அடைந்த மேற்குலக நாடுகள் அரசியல் அபிவிருத்தியினை சாத்தியப்படுத்தினார்கள் என்கின்ற அனுபவத்தின் ஊடாக அரசியல் அபிவிருத்தியினை உருவாக்குவதற்கு பகுத்தறிவுடன் கூடிய பணியக அமைப்பாளர்களது அர்ப்பணிப்பான பங்களிப்புக்கள் இன்றியமையாதவை.

**அரசியல் கலாசார அணுகுமுறை :-** நவீன அரசியல் விஞ்ஞான ஆய்வுகளில் அரசியல் கலாசாரத்திற்கான முக்கியத்துவமானது அதிகளவிலானதாக வழங்கப்பட்டு வருவதனைக் காணலாம். அரசியல் அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகளிலும் அரசியல் கலாசாரத்துக்கு தனித்துவமான இடம் வழங்கப்பட்டுள்ளது. சிட்னி வேர்பா (Sidney Verba) என்கின்ற அறிஞர் தனது அரசியல் கலாசாரக் கோட்பாடு (Theory of Political Culture) என்கின்ற கட்டுரையில் அபிவிருத்தியுடன் தொடர்புடைய பல விடயங்களில் அரசியல் அபிவிருத்தியும் அரசியல் கலாசாரமும் கொண்டிருக்கின்ற உறவானது மிக நெருக்கமானது என்கின்றார். (குணரத்தினம் 2007:117) அரசியல் அபிவிருத்தியிலுள்ள முக்கிய அம்சமாகிய அரசியல் பங்குபற்றுதல் கலாசாரமானது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக அரசியல் முறையில் முதன்மையானதாக உள்ளது.

அரசியல் கலாசாரம் தொடர்பாக மேற்குலக நாடுகளில் ஆய்வுகளினை மேற்கொண்ட பல அறிஞர்கள் அரசியல் அபிவிருத்தியானது கலாசாரங்களுடன் கொண்டுள்ள தொடர்பானது அதிகளவானது எனவும் அரசியல் கலாசாரம் உள்வாங்கியுள்ள பழைய மற்றும் புதிய மரபுகள் முக்கியமானவையாகவும் புதிய மரபுகள் பழைய மரபுகளின் ஒரு பகுதியாகக் காணப்படுவதுடன், அவை அரசியல் கட்டமைப்புக்களில் மாற்றங்களினை ஏற்படுத்துகின்றன என்கின்றனர். இவ்

மாற்றங்கள் அரசியல் அபிவிருத்திக்கும் அந் நாடுகளின் சூழ் அமைவுகளுக்கும் மிகப் பொருத்தமானவையாக உள்ளன என்கின்றார்.

**பொருளாதார அணுகுமுறை :-** பொருளாதார வளர்ச்சிநிலையானது அரசியல் அபிவிருத்தியின் அளவுகோலாகப் பயன்படுத்தப்படுகின்றதன் பின்னணியில் அரசியல் அபிவிருத்திக்கான பொருளாதார அணுகுமுறையானது முதன்மையானதாக உள்ளது. கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து போன்ற அடிப்படை சமூகக்கட்டமைப்பு வளர்ச்சி நிலையினை எய்துவதற்கு பொருளாதார வளர்ச்சியானது அவசியமானதாக உள்ளது. புவியியல் ரீதியிலான காரணங்கள், அரசியல் எல்லைப்பரப்புக்கள், சனத்தொகை என்பவற்றுக்கு ஏற்ப பொருளாதாரத் தேவைகள் வேறுபட்டுக் காணப்படுகின்ற போது இவ் வேறுபாடுளினைக் கடந்து பொருளாதாரம் வளர்ச்சியடைகின்ற போது தான் ஒரு தேசமானது கட்டியெழுப்பப்படுகின்றது. இதுவும் அரசியல் அபிவிருத்தியினது பிரதான அம்சமாக உள்ளது. ஒரு நாட்டு மக்களது பொருளாதார ரீதியிலான பாதுகாப்பு மற்றும் தனிமனிதர்களது பொருளாதார ரீதியிலான உரிமைகளினை ஒரு அரசானது உறுதிப்படுத்துகின்ற போது அரசியல் அபிவிருத்தியினது நிலைபேற்றுத்தன்மையானது மீள உறுதிப்படுத் தப்படுகின்றன.

ஜனநாயக விழுமியங்களது அபிவிருத்தி நிலைக்கு பொருளாதார வளர்ச்சியானது அவசியமானதாக உள்ளது. பொருளாதார அபிவிருத்தி நிலைக்கும் மக்களது அரசியல் ரீதியிலான திருப்தி மட்டத்துக்கும் இடையே நேரடியான தொடர்பு உண்டு. பொருளாதார ரீதியாக மக்கள் தன்நிறைவான வாழ்க்கையினை வாழ்வார்களாயின் அரசுக்கு எதிராக புரட்சிகள், கிளர்ச்சிகளினை மேற்கொள்ள மாட்டார்கள். பொருளாதார விற்பனர்களது கருத்துக்களின் பிரகாரம் அமெரிக்க புரட்சி, பிரித்தானிய புரட்சி, பிரான்சிய புரட்சி, ரக்ஷ்ய புரட்சி என்பனவெல்லாம் பொருளாதார ரீதியிலான அதிருப்தி நிலைகளினாலேயே தோற்றம் பெற்றன என்கின்றனர். சில வளர்முக நாடுகளது கொள்கை வகுப்பாளர்கள் மேற்குலக நாடுகளது நலன்களுக்கு சார்பான வகையில் கொள்கைகளினை வகுப்பதனால் அது சாதாரண பாமர மக்களினை நேரடியாகப் பாதிப்பதுடன் அது அரசியல் அபிவிருத்தியிலும் தாக்கம் செலுத்துவதனை காணக்கூடியவாறு உள்ளது.

**சமூக முறைமை அணுகுமுறை :-** தேசிய அரசுகள் ஒவ்வொன்றிலும் மதம், சாதி, இனம், மொழி, பிராந்தியம், அந்தஸ்து, உப அரசியல் கலாசாரம், உப தேசியவாதம் போன்றவற்றினைக் கொண்ட பிரிவினர்களும் குழுக்களும் காணப்படுகின்றனர். இவை தேசிய அரசாங்கத்தினது செயற்பாடுகள் அனைத்திலும் எவ்வளவுதூரம்பங்கெடுக்கின்றனஎன்பதனைப் பொறுத்ததாகவே அரசியல் அபிவிருத்தியினது தரமானது நிர்ணயிக்கப்படுகின்றது. அரசியல் பங்கெடுப்பதற்கான வாய்ப்புக்கள் அனைவருக்கும் எவ்வகையான பாரபட்சமும் இன்றி வழங்கப்படுவதனை அரசுகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறான ஒரு புறச்சூழ்நிலையியேதான் அரசியல் அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் தெளிவாகக் காணப்படும். அரசியல் அபிவிருத்தியானது ஒரு சமூகத்தில் காணப்படுகின்ற தனிநபர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நிலவுகின்ற பரஸ்பர உறவினை விரிவாக ஆராய்வதாக உள்ளது. எனவே அரசியல் அபிவிருத்தியினை சமூகத்திலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாது.

ஒரு சமூகத்தில் மொழி, மதம் மற்றும் இன ரீதியிலான வேறுபாடுகள் ஆழமாக வேரூன்றிக் காணப்படுமாயின் அங்கு அரசியல் அபிவிருத்தி தொடர்பாக எதிர்மறையான விளைவுகளினையே காணலாம். இத்தகைய சூழ்நிலையில் ஆதிக்கம் செலுத்துகின்ற இனமானது அரசாங்கத்தினையும் நாட்டினது வளங்களினையும் தமது இனத்தினது

நலன்களுக்காக மட்டும் இயக்குவிக்க முற்படுகின்ற போது அவற்றினால் பாதிக்கப்படுகின்ற சிறுபான்மை சமூகங்கள் அல்லது இனக்குழுக்கள் அரசாங்க செயற்பாடுகளில் இருந்து விடுபட்டும் உபதேசியவாதக் கோரிக்கையினை முன்வைத்தும் பிரதான தேசியத்துக்கு எதிராக தொழிற்பட விளையலாம். இத்தகைய நிலையின் தொடர்ச்சியும் பாதிப்புக்களும் உள்ளக முரண்பாடுகளினையும், புரட்சிகளினையும், உள்நாட்டு யுத்தங்களினையும் தோற்றுவிக்கலாம். இதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் அரசியல் அபிவிருத்தியினை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிப்பவையாகவும் காணப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையானது பல வளர்முக நாடுகளில் காணப்படுவதனால் அங்கு அரசியல் அபிவிருத்தியினை அடைந்துகொள்வது சவால்கள் மிக்கதாகவுள்ளது. எனவேதான் அரசியல் அபிவிருத்தியினை அடைந்து கொள்வதில் பல்லின சமூகங்களினைக் கொண்டுள்ள நாடுகளில் சம வாய்ப்புக்கள், பாரபட்சம் அற்ற தன்மை, சுதந்திரம், சுயாதீனம் போன்ற விடயங்கள் அங்குள்ள அனைத்து சமூகங்களும் சமமாகக் கிடைக்கின்றனவா என்பதனை முதலில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**அரசியல் அபிவிருத்தியும் நவீனமயமாக்கலும்**

நவீனமயமாக்கல் என்கின்ற விடயமானது 1950, 1960களில் அபிவிருத்தி பற்றிய கோட்பாடுகளுடன் பரவலடைந்த ஒன்றாகவுள்ளது. அரசியல் அபிவிருத்தி மற்றும் அரசியல் நவீனத்துவம் என்பதன் பொருளானது ஒன்றாகவுள்ளது. அவற்றினை வரையறுப்பதன் மூலம் மட்டும் சீராக விளங்கிக்கொள்ள முடியாது. ஆனால் அரசியல் அபிவிருத்தியின் முக்கிய உள்ளடக்கங்களாகிய கல்வி அறிவு, உயர் தொழில்நுட்ப வசதிகள், சுகாதார மருத்துவ வசதிகள், சீரான பொருளாதார வளர்ச்சி என்பவற்றினை நடைமுறைப்படுத்துகின்ற போது அரசியல் அபிவிருத்தியும் அரசியல் நவீனத்துவமும் ஒன்று என உணரலாம். ஆனாலும் அரசியல் அபிவிருத்தி மட்டத்தினை நவீனமயமாக்கல் செயற்பாட்டினைக் கொண்டு அளவீடு செய்து கொள்ள முடியும். இதனை சாமுவேல் P.ஹங்டிங்டன் (Samuvel.P.Hunitinton) தனது "Political Development and Political Decay" என்கின்ற தனது ஆய்வில் "நவீனமயமாக்கல் என்பது அரசியல் அபிவிருத்தியில் இருந்து வேறுபட்டது. ஆனால் அரசியல் அபிவிருத்தியினை அடையாளப்படுத்த மிகவும் உதவியது" என்கின்றார். (புஸ்பராஜ் 2011:180)

மேலும் நவீனத்துவத்திலும் அரசியல் அபிவிருத்தியிலும் சில பொதுவான பண்புகளினை அடையாளப்படுத்தக் கூடியதாக உள்ளது. சாதாரண மக்கள் மத்தியில் அரசியல் அபிவிருத்தி, நவீனமயமாக்கம், மேற்குலகமயமாக்கம் என்கின்ற விடயங்கள் தொடர்பாக தெளிவின்மை காணப்படுகின்றது. குறிப்பாக நவீனமயமாக்கல் செயற்பாட்டிற்கும் மேற்குலகமயமாக்கலுக்கும் வித்தியாசம் காணப்படாமையினாலேயே அரசியல் அபிவிருத்திக் கோட்பாடுகள் வளர்முக நாடுகளில் தோல்வி கண்டன எனவும் கூறப்படுகின்றன. ஏனெனில் சில வளர்முக நாடுகள் நவீனமயமாக்கல் என்கின்ற போர்வையில் தமது நாடுகளது சமூகக் கட்டமைப்பு மற்றும் அரசியல் கட்டமைப்புக்களில் மேற்கத்தேயமயமாக்கல் செயற்பாடுகள் ஊடுருவுவதாகவும் இதனால் பல்லின சமூகத்தினைக் கொண்டுள்ள தமது நாட்டில் பல்வேறு முரண்பாடுகளும் பிரச்சினைகளும் காலத்துக்கு காலம் தோற்றம் பெறுகின்றன என சில மூன்றாம் உலக நாடுகள் நம்புகின்றன.

ஒரு சமூகத்தில் அல்லது ஒரு இனத்திடம் சுயாட்சிக்கான அடையாளங்களும் இயல்புகளும் காணப்படுமாயின் அத்தகைய அடையாளங்களும் இயல்புகளும் நன்கு வளர்ச்சியடைந்த அரசியல் அபிவிருத்தியினை நோக்கி உந்துகின்றன எனலாம். இதற்கு சான்றாக தாராண்மைவாத நாடுகளில் சுயாட்சியின் அடித்தளத்திலேயே அரசியல் அபிவிருத்தி இலகுவாக

கட்டியெழுப்பப்பட்டுள்ளமையினைக் கூறலாம். அரசியல் அபிவிருத்தியினை அடைந்து கொள்வதிலும் அதனைப் பாதுகாப்பதிலும் ஜனநாயக விழுமியங்களுக்கு தனித்துவமான பங்குண்டு. எனவே தான் அரசியல் அபிவிருத்தியானது ஜனநாயக விழுமியங்களினை அடிப்படையாகக் கொண்ட சிறப்பான அரசியல் கட்டமைப்புடன் கூடிய அரசியல் செயல்முறைகளில் இழையோடியுள்ளது என்கின்றனர். இவ்வாறு ஜனநாயக விழுமியங்களுடன் தொடர்புபட்டுள்ள அரசியல் அபிவிருத்தி யானது நன்கு வளர்ச்சியடைந்து நிறுவனமயமாக்கல் வரையில் வளர்ச்சி அடைந்துள்ளமையினையும் தாராண்மை வாத நாடுகளில் காணலாம்.

அரசியல் அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு ஆய்வுகளினையும் வரைவிலக்கணங்களினையும் முன்வைத்த அல்மொன்ட் மற்றும் பவல் (Almond and Powell) ஆகிய அறிஞர்கள் அரசியல் அபிவிருத்தியானது பின்வரும் பிரச்சனைகளினை எதிர்நோக்கி வருகின்றன என குறிப்பிடுகின்றனர். (Das & Choudhury 1997:119)

- அரசினை கட்டியெழுப்புதல் பற்றிய பிரச்சினை
- தேசத்தினை விருத்தி செய்தல் பற்றிய பிரச்சினை
- பங்குபற்றுதலில் உள்ள பிரச்சினை
- பங்கீடு செய்தல் பற்றிய பிரச்சினை

அரசினைக் கட்டியெழுப்புதல் பற்றிய பிரச்சனையானது அரசியல் அபிவிருத்தி எதிர்நோக்குகின்ற பிரதான பிரச்சினையாகக் காணப்படுகின்றது. ஏனெனில் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் ஒரு அரசுக்கு பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு பிரச்சினைகளும் சவால்களும் காணப்படு வதனால் தேசிய அரசு ஒன்றினது நிலைபேற்றுத்தன்மையினை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. பிராந்திய அரசியல் மற்றும் சர்வதேச அரசியலின் போக்குகளினால் ஏற்படுகின்ற மாற்றங்கள் போன்றவற்றினால் அதிகாரத்திலுள்ளவர்களுக்கு ஏற்படுகின்ற அச்சுறுத்தல்கள், வளப்பங்கீடு, அபிவிருத்தி செயற்பாடுகள், மத்திய மயப்படுத்தல் போன்ற காரணங்களினால் அரசினை கட்டியெழுப்புகின்ற செயற்பாடானது அரசியல் அபிவிருத்தியில் சவால்கள் நிறைந்தன வாகவுள்ளது.

தேசத்தினை விருத்தி செய்தல் பற்றிய பிரச்சினையானது அரசுடனும் பிரஜை களுடனும் தொடர்புபட்டவையாகக் காணப்படுகின்றது. அதாவது மக்களது அரசியல் பங்குபற்றுதல் மற்றும் தேசத்தின் மீதான விசுவாசம் என்பன கிராமத்தில் இருந்து மத்திய அரசினை நோக்கியதாக அமைய வேண்டும் எனவும் பிரஜைகள் தமக்குள்ளான வளப்பங்கீடு மற்றும் பரிமாற்றங்கள் தேசவிருத்தியின்பால் அமைய வேண்டும். அரசினை விருத்தி செய்தல், தேசத்தினை விருத்தி செய்தல் என்பதனை இணைந்த வகையிலும் வேறுபட்ட வகையிலும் ஆராயலாம். ஆனால் பல நாடுகளில் அரசினை கட்டியெழுப்புவதன் மூலம் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட வரலாறும் உண்டு. எனவே தான் அரசியல் அபிவிருத்தியில் தேசத்தினை விருத்தி செய்தல் பற்றிய பிரச்சினையும் பிரதானமானதாக உள்ளது.

பங்குபற்றுதலில் உள்ள பிரச்சினை என பார்க்கின்ற போது ஒரு சமூகத்தில் குறிப்பாக ஒரு பல்லின சமூகத்தில் பல்வேறு நோக்கங்களினையும் தேவைகளினையும் கொண்ட குழுக்கள் ஆர்வத்துடன் காணப் படுகின்றன. இவை அரசாங்கத்தினது கொள்கை உருவாக்கம், தீர்மானம் எடுத்தல் செயற்பாடுகளில் பங்காளர்களாக மாற்றுவிக்கப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட குழுக்களுடன் இணைந்த வகையில் அரசியல் செயற்பாட்டு அம்சங்களான அரசியல் கட்சிகள், நிறுவனங்கள் போன்றன பங்கெடுக்கின்ற போது அரசு உருவாக்குகின்ற கொள்கைகள், திட்டங்கள் சிறப்பானதாகவும் அனைத்து மக்களது விருப்புக்களினையும் பாரபட்சம்

அற்றவகையில் பூர்த்திசெய்வதாகவும் காணப்படும். இத்தகைய ஆரோக்கியமான அரசியல் பங்குபற்றுதலானது அரசியல் அபிவிருத்தியினை துரிதப்படுத்தும்.

பங்கீடு செய்தல் பற்றிய பிரச்சினை என்கின்ற போது அதாவது தேசிய வருமானம் மற்றும் குறித்த அரசினது வளங்கள், செல்வங்கள் மக்கள் மத்தியில் பங்கீடு செய்துகொள்ளுதல் வேண்டும். இவ்வகை பங்கீட்டின் போது தோலினது நிறவேறுபாடு, இன வேறுபாடு, மொழி வேறுபாடு மற்றும் மத வேறுபாடு போன்றவற்றுக்குஅப்பால்செயற்படவேண்டும். திறமை மற்றும் தகுதி போன்றவற்றுக்கு உரிய மரியாதையும் கௌரவமும் வழங்கப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட விடயங்களே பிரஜைகளுக்கு பாரபட்சம் அற்ற சமத்துவமான வாய்ப்பு உள்ளது என்பதனை உணர்த்துகின்றன. இத்தகைய நிலையானது அரசியல் அபிவிருத்திக்கும், நலன்புரி அரசினை நோக்கியும் குறித்த நாட்டினை வேகமாக நகர்த்தி செல்வதாகக் காணப்படுகின்றன.

அரசியல் அபிவிருத்தி என்கின்ற எண்ணக்கருவானது வேகமான வளர்ச்சி யுடன் பல்வேறு அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடயங்களினை உள்ளடக் கியுள்ள கோட்பாடாக வளர்ச்சியடைந்ததன் பின்னணியில் தேசிய அரசுகள் தமது நாடுகளில் அரசியல் அபிவிருத்தியினைத் தோற்றுவிப்பதற்காக பல்வேறு முயற்சி களினையும் மேற்கொண்டு வருகின்றன. ஆனால் உலக நாடுகள் மத்தியில் அரசியல் அபிவிருத்தியினை அளவிட்டுக் கொள்வதற்கான பொதுமையான அளவீட்டு பொறிமுறையினை உருவாக்க முடியவில்லை. இதன் காரணமாக உலக நாடுகள் அடைந்துள்ள அரசியல் அபிவிருத்தியினை மதிப்பீடு செய்து கொள்வது முழுமையான ஒன்றாக அமையாது. ஏனெனில் அரசியல் அபிவிருத்தியினை அரசியல் பெறுமானங்களினை மட்டும் கொண்டு விளக்கவோ மதிப்பீடு செய்து கொள்ளவோ முடியாது. அரசியல் அபிவிருத்தியினையும் பொருளாதார மற்றும் சமூகக் குறிகாட்டிகளினை அடிப்படையாகக் கொண்டே அளவீடு செய்து கொள்ள முடியும். அரசியல் அபிவிருத்தி குறிப்பிடுகின்ற சமூகத்தினை நாடுகள் மத்தியில் இனங்காண்பதும் பிரச்சினைக்குரியதாகின்றது. ஏனெனில் வளர்ச்சி அடைந்த சமூகம் என்று எவ்வாறு கூறுவது என்பது பற்றியும் அது பொதுமைப்பாடான ஒன்றாக அமையுமா என்பது பற்றியும் கேள்விகள் உள்ளன. ஏனெனில் ஒரு சமூகத்தில் உள்ள மனிதனுக்கு தனது சமூகமும் அது கொண்டுள்ள சமூகப்பெறுமானங்களுமே உயர்வானவையாகக் காணப்படும். ஒரு அரசாங்க முறை அல்லது அரசியல் முறைக்குள் வாழ்கின்றவனுக்கு அது சிறப்பான ஒன்றாகவும் மற்றயவர்களுக்கு அவற்றினை விட சிறப்பான அரசியல் முறையும் அரசாங்க முறையும் உள்ளன என தோன்றலாம். இது மனிதனது மாறுபட்ட நடத்தைக் கோலங்களுடன் தொடர்புபட்ட ஒன்றாகவுள்ளது. 1960களில் உயர்ந்த ஜனநாயக விழுமியங்களினைக் கொண்டுள்ள நாடுகள் என கூறுகின்ற மேற்கத்தேய நாடுகளினை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் அடைய வேண்டிய இலக்குகளினை கொண்ட சமூகமே சிறந்த சமூகம் எனவும் இதுவே அரசியல் அபிவிருத்தி எதிர்பார்க்கின்ற அளவீட்டினைக் கொண்ட சமூகம் என வரையறுக்கப்பட்டது. இந் நிலைப்பாடு தொடர்பாகவும் வாதப்பிரதி வாதங்கள் காணப்படுகின்றன.

லிப்செட் (Lipset) என்கின்ற அறிஞர் பொருளாதார அபிவிருத்தி எனப்படுவது தேசிய அரசியல் முறைமையில் ஏற்படுத்தும் தாக்கத்தினை புள்ளிவிபர ரீதியான அளவீட்டினை மேற்கொண்டு விளக்க முற்பட்டிருந்தார். இது அரசியல் அபிவிருத்தியினை அளவீடு செய்கின்ற போது கல்வி, பொருளாதாரம், தொடர்பாடல், நகரமயமாக்கம், தனி மனிதனது அரசியல் பங்குபற்றுதல் போன்ற தரவுகளினை அரசியல் அபிவிருத்தி அளவீட்டிற்காக

பயன்படுத்தியிருந்தார். (Das & Choudhury 1997:125) இன்று அரசியல் அளவீட்டினை மேற்கொள்வதற்காக அரசியல் செயற்பாடுகள், சமூக செயற்பாடு, கட்சிகளினது வளர்ச்சி நிலை, மக்களின் பங்குபற்றுதல், வளப்பங்கீட்டிற்கான ஏற்பாடுகள், சமூகப் பாதுகாப்பு, பொது நலன்கள், சிறுபான்மை, சமூகங்களது உரிமைகள், சட்டத்தின் ஆட்சி, சுகாதாரம், கல்வி, பொருளாதார வளர்ச்சி, அரசியல் சமூக பொருளாதார சுதந்திரம் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டு அரசியல் அபிவிருத்தியானது இன்று அளவீடு செய்யப்படுகின்ற போதும் இம்முறை பொதுமைப்படான ஒன்றாக அனைவரினாலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

**முடிவுரை**

அரசியல் அபிவிருத்தி தொடர்பான பூரணமான வரைவிலக்கணம் இன்று வரையில் காணப்படாமையினாலும் அரசியல் அபிவிருத்தி கோட்பாடு உள்ளடக்கியுள்ள விடயங்களில் அவற்றின் நோக்கங்கள் தெளிவாகக் காணப்படாமையினாலும் அரசியல் அபிவிருத்தி கோட்பாடு பலவீனப்படுவதற்கு பிரதான காரணங்களாக உள்ளன. மேலும் அரசியல் அபிவிருத்தி கோட்பாடானது உலக நாடுகளுக்கு பொருந்தக்கூடிய பொதுமைப்பாடான ஒரு முறையினை முன்வைக்கவும் இல்லை. (Abhayewardhana, Nanayakkara, Hettige, Keertiratne & Selvakumaran 1999:27)

அரசியல் அபிவிருத்தியினை ஒப்பீடு செய்தல் அல்லது எந்த அடிப்படையில் ஒப்பீடு செய்தல் என்பது தொடர்பான கேள்விகளும் இக்கோட்பாட்டினை பலவீனப்படுத்தியுள்ளது. ஒரு சமூகத்தில் அல்லது ஒரு நாட்டில் ஏற்படுகின்ற அரசியல் மாற்றங்களுக்கும் அரசியல் அபிவிருத்திக்கும் அரசியல் காரணிகள் முதன்மையானவையாகக் காணப்படுகின்ற போதும் அதற்கு அப்பால் சமூக, பொருளாதார காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனையே பேராசிரியர் எஸ். பி.வர்மா (Prof.S.P.Varma) சமூக, பொருளாதார, நிர்வாக, கலாசார வேறுபாடுகள் அரசியல் அபிவிருத்தியில் பிரதான இடத்தினைக் கொண்டுள்ளது. இவற்றினை வேறுபடுத்துவது கடினம். இவை புலமைசார் ஆய்வுக்கு உதவுகின்றன என குறிப்பிடுகின்றார். (Abhayewardhana, Nanayakkara, Hettige, Keertiratne & Selvakumaran 1999:28)

பொருளாதார ரீதியில் மாக்சிச சிந்தனையினைக் கொண்டுள்ளவர்கள் அரசியல் அபிவிருத்தி என்பது உலக நாடுகளுக்கு பொதுவான ஒரு மாதிரியாக இல்லாமையினால் இதனை நாடுகள் அமுல்படுத்த விளைகின்ற போது பல்வேறு அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் தலையெடுக்கின்றன என விமர்சிக்கின்றனர். அரசியல் அபிவிருத்தி கோட்பாடும் அதன் அணுகுமுறையும் முழுக்க முழுக்க மேற்கத்தேய மாதிரியினைக் கொண்டது எனவும் மேற்கத்தேய சமூகத்தினை உயர்வாகக் காட்டி மூன்றாம் உலக நாடுகளது சமூகங்களினை தாழ்வாகக் காட்டுவதற்கான ஒரு அளவீடாக அல்லது பிரித்துக் காட்டுகின்ற ஒரு கருவியாகவே உள்ளது எனக் கூறப்படுகின்றது.

எது எவ்வாறான போதும் அரசியல் அபிவிருத்திக் கோட்பாட்டினை புலமைசார் நோக்கில் பார்க்கின்ற போது பரந்த விடயங்களினையும் அணுகுமுறைகளினையும் கொண்ட கோட்பாடாகவும் இது அரசியல் நிலமைகளினையும் முறைமைகளினையும் கற்பதன் மூலம் மூன்றாம் உலக நாடுகளில் புதிய விருத்தி அடைந்த சமூகத்தினை உருவாக்குவது தொடர்பாக ஆராய்கின்றமையும் இக் கோட்பாட்டிற்கு அரசியல், சமூக வியல், பொருளியல் அறிஞர்களது பங்களிப்புக்கள் காணப்படுகின்றமையும் வரவேற்கத்தக்கதாகவும் ஆராய்வுக்கு வேண்டியதாகவும் உள்ளது. ஆனால் மறைமுகமாக அரசியல் அபிவிருத்தியினைக் கொண்டு வளர்ச்சி அடைந்த மேற்குலக நாடுகள் அரசியல் அபிவிருத்தியில் தாம் முன்னோடிகள்

*எனவும், வளர்முக நாடுகளில் உள்ள சமூகங்கள் அரசியல் அபிவிருத்தி அடையாத பின்தங்கிய சமூகங்கள் எனவும் அடையாளப்படுத்தவும் வேறுபடுத்தவும் அரசியல் அபிவிருத்தி என்கின்ற எண்ணக்கருவினை பயன்படுத்துகின்றன. துரதிஷ்ட வசமான ஒன்றாகவுள்ளது.*

**உசாத்துணை நூல்கள்**


1. Das.H.H., Choudhury.B.C., (1997), Introduction to Political Sociology, Vikas Publishing house PVT.LTD, New Delhi, P.117.

2. Abhayewardhana. H.A.P., Nanayakkara. G., Hettige. S.T., Keertiratne. J.G., Selvakumaran. N., (1999), Report of the Commission of Inquiry on Local Government Reforms, The Department of Government Printing, Sri Lanka, P.27.

3. Manivasagar.A.V., (1998), Current Political Models, Social Scientist Publications, University of Jaffna, Sri Lanka.

4. புஸ்பராஜ்.சி., (2011), அரசியல் சமூகவியல்- ஓர் அறிமுகம், காயத்திரிபப்ளிக்கேஷன், தெஹிவளை, இலங்கை.

5. குணரத்தினம். வே., (2009), அரசியல் விஞ்ஞான ஆய்வில் அணுகுமுறைகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

6. குணரத்தினம். வே., (2007), அரசறிவியலில் நடத்தைவாத எண்ணக்கருக்கள், கிருஷ்ணி வெளியீடு, கொழும்பு.